**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 126/2024**
**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | மரு. தெய்வா | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. தங்கவேல் | **Calling** | : | **PG – Ist year** |
| **Village** | : | கற்பக விநாயக மருத்துவக் கல்லூரி மருத்துவமனை | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | செங்கல்பட்டு | **Age** | : | **32** |
| | | | **Dated** | : | **19.08.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 7 (பட்டியல் சாட்சி 10), **மரு. தெய்வா** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கற்பக விநாயக மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலாம் ஆண்டு மேற்படிப்பு படித்து வருகிறேன். கடந்த 18.08.2021ம் தேதி மதியம் 01.16 மணியளவில் நான் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, திண்டுக்கல், பெரியபள்ளபட்டி, பேகம்பூர் (PO) ல் வசிக்கும் சசிக்குமார் (42 வயது), தகப்பன் பெயர் காளிமுத்து என்பவரை அவரது மனைவி அமுதா அவசர சிகிச்சை பிரிவுக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவருக்கு நான் சிகிச்சை அளித்தேன். மேற்படி நபருக்கு காயங்கள்

1) இடது பக்க தலையில் (Left Pareital Region) 12x2x2 cm அளவில் ஒரு ஆழமான சிதைந்த காயம் இரத்தம் வழிந்த படியே இருந்தது.

2) வலது பக்கம் உள்ளங்கையில் ஒரு சிதைந்த காயம் 3x1x1 cm அளவில் இரத்தம் வழிந்தபடியே இருந்தது. இவை இருந்ததால் நான் அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். மேற்படி நபருக்கு காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்று கேட்டதற்கு, அன்று 18.08.2021ம் தேதி மதியம் 12.30 மணியளவில் பள்ளபட்டி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு முன் ஒரு தெரிந்த நபர் அவரை அருவாள் மற்றும் ராடு வைத்து தாக்கியதாக கூறினார். நான் மேல் சிகிச்சைக்காக அவரை மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு செல்லுமாறு நான் பரிந்துரை செய்தேன். மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரின் கூற்றுப்படி மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று அளித்தேன். **நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ. 6**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் பொதுநல சிகிச்சை மட்டுமே செய்வதற்கு அன்றைய தேதியில் எனக்கு அதிகாரம் இருந்தது. அசா. 2 என்னிடம் தன்னிடம் ஒரு நபர் தாக்கியதாகத் தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தன்னை அடித்த நபரின் அடையாளத்தை அசா. 2 என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். மதுரையில் கொடுக்கப்பட்ட சிகிச்சை விபரங்களை வைத்துத்தான் அசா. 2க்கு ஏற்பட்டது கொடுங்காயங்கள் என்று நான் சான்று அளித்தேன் என்றால் சரிதான். மதுரையில் அசா. 2க்கு எந்த வகையிலான சிகிச்சை வழங்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். மதுரையில் கொடுக்கப்பட்ட சிகிச்சை சம்மந்தப்பட்ட ஆவணங்களை போலீசார் விசாரணையில் என்னிடம் கேட்டார்களா என்றால் எனக்கு நினைவு இல்லை. இ.த.ச. 320 பிரிவின்படி சொல்லப்பட்டுள்ள வகையில் அசா. 2க்கு ஏற்பட்டது கொடுங்காயங்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு மண்டை ஓட்டில் எலும்பு முறிவு இருந்தது ஸ்கேன் செய்து பார்த்த போது தெரிய வந்தது. கரடு முரடான தரையில் விழுந்து தலையில் அடிபடும் போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு

உள்ளது என்றால் சரியல்ல. கூரான ஆயுதத்தால் தாக்கப்படும்போது மட்டுமே மேற்படி காயங்கள் ஏற்படும்.

**மறுவிசாரணை : -** இல்லை.

Taken down by me/before me in open court on 19.08.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.